**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,　　　　　　　　　　　　　　　　　　　　　தேதி:29.09.2023
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

### பட்டயப்படிப்பிற்கான இணையதள கலந்தாய்வு

பட்டயப்படிப்பிற்கான இணையதள கலந்தாய்வில் கலந்து கொண்டு இடஒதுக்கீடு பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு 04.10.2023 அன்று சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்துகொள்ள அவர்களின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சலுக்கும் மற்றும் அவர்களின் அலைபேசி எண்ணுக்கு குறுஞ்செய்தி அனுப்பப்பட்டுள்ளது.

**சான்றிதழ் சரிபார்ப்பிற்குரிய நடைமுறைகள்**

(அ) சான்றிதழ் சரிபார்ப்பிற்கு முன் அண்ணா அரங்கம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவையில் விண்ணப்பதாரர்கள்கலந்தாய்வு கட்டணமாக ரூபாய். 200/- (பொது பிரிவினர் (OC) / பிற்படுத்தப்பட்டோர் (BC) மற்றும் பிற்படுத் தப்பட்டோர் (இஸ்லாமியர்) (BCM) / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (MBC) மற்றும் சீர்மரபினர்) அல்லது ரூபாய்.100/- (ஆதி திராவிடர் (SC) /ஆதி திராவிடர் – அருந்ததியர் (SCA) மற்றும் பழங்குடியினர் (ST) மாணவர்கள்) செலுத்தவேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர்களுடைய உண்மையான மேல்நிலைத் தேர்வு, (+2) மதிப்பெண் சான்றிதழ், ($10^{th}$) பத்தாம் வகுப்பின் மதிப்பெண் சான்றிதழ், மாற்றுச் சான்றிதழ் (Transfer Certificate) மற்றும் சாதி சான்றிதழ் போன்றவற்றை சான்றிதழ் சரிபார்ப்பு அன்றே முதன்மையர் (வேளாண்மை) அவர்களிடம் மட்டுமே கோவையில் சமர்ப்பிக்க வேண்டும்.

(இ) சான்றிதழ் சரிபார்ப்பிற்கு பின் தங்களுடைய சேர்க்கை கட்டணமாக ரூபாய். 5000/- தினை 04.10.2023 அன்றே பல்கலைக்கழக வளாகத்தில் நேரிடையாகவோ (அல்லது) 07.10.2023

தேதிக்குள் இணைய வழியாக செலுத்த வேண்டும் . சேர்க்கை கட்டணத்தை உங்களுடைய பயனாளர்சொல் (User ID) மற்றும் கடவுச் சொல்லை (Password) கொண்டு http://tnagfi.ucanapply.com என்ற இணையதளத்தில் உள் நுழைந்து கட்டவும்.

(ஈ) விண்ணப்பதாரர்கள் குறிப்பிட்ட தேதிக்குள் தங்களுடைய சான்றிதழ்களை சமர்ப்பிக்க தவறினாலோ அல்லது சேர்க்கை கட்டணம் செலுத்த தவறினாலோ அவர்களுடைய சேர்க்கை இரத்தாகி விடும்.

(உ) இவ்வாறாக இரத்தான இடங்களுக்கான அடுத்தடுத்த இடஒதுக்கீடு மூலம் நிரப்பப்படும்.

(ஊ) மேற்கூறிய விதிமுறைகளை பின்பற்றாமல் இடஒதுக்கீட்டை தவறவிட்டவர்களுக்கு மறுவாய்ப்பு வழங்கப்படாது.

**மேலும் விவரங்களுக்கு**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூரில் பயன்பாட்டில் உள்ள 9488635077, 9486425076 என்ற அலைபேசி எண்களை தொடர்பு கொள்ளலாம் மற்றும் ugadmissions@tnau.ac.in என்ற மின்னஞ்சல் வழியாகவும் தொடர்பு கொண்டு தெளிவு பெறலாம்.

*மக்கள் தொடர்பு அலுவலர்*